# கோயம்புத்தூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ஆணை பிறப்பிப்பவர் : திருமதி.ந.கீதா, எம்.எஸ்.சி., எம்.எட்.,

ப.மு.எண்.12629/அ1/2021, நாள்.12.11.2021.

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக்கல்வித்துறை – இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் – 2018-2019 மற்றும் 2019 – 2020ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி IV தேர்வு மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட இளநிலை உதவியாளருக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக்கல்வித் (வரவு-செலவு-I) துறை, நாள் 18.05.2018.
2. சென்னை – 3, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு செயலாளரின் கடிதம் எண்.2563/PSD-12/2020, நாள் 21.07.2020.
3. கோயம்புத்தூர், முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.6967/அ1/2020, நாள் 17.09.2020.
4. தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, சேரிபாளையம் கடிதம் ந.க.எண்.97/2021, நாள்.28.10.2021.

**********

2018-2019 மற்றும் 2019 – 2020ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழுவால் இளநிலை உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை (2)ல் கண்ட செயல்முறைகள் மூலம் பள்ளிக்கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (3)ல் காண் செயல்முறைகளின்படி கீழ்கண்ட பணியாளருக்கு நியமன ஆணை வழங்கப்பட்டது.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வகை 14 – ன் கீழ் உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்ட கீழ்க்கண்ட பணியாளருக்கு பணிவரன்முறை செய்ய வேண்டி பார்வை (4)ன் வாயிலாக உரிய கருத்துரு பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்காண் இளநிலை உதவியாளருக்கு அவரது பெயருக்கெதிரில் கலம் (4)ல் குறிப்பிட்டுள்ள நாளில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி (திருவாளர்) | பணிபுரியும் பள்ளி / அலுவலகம் | இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | செல்வி.சு. ராஜேஸ்வரி, இளநிலை உதவியாளர் | அரசு மேல்நிலைப்பள்ளி, சேரிபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். | 21.09.2020 முற்பகல் |

08.12.2023

Headmaster
Government Higher Secondary School
Seripalayam - 642 120

**நிபந்தனைகள் :**

1. இந்த பணிவரன்முறையானது, பார்வை (2)ல் குறிப்பிட்டுள்ள தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, சென்னை / சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையிலுள்ள 2018-2019 மற்றும் 2019 - 2020ஆம் ஆண்டுகளில் தொகுத IVன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும்.
2. இவர் பணியேற்ற நாள் முதல் 3 ஆண்டுகள் தொடர் பணிக்காலத்தில் 2 ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக வைக்கப்படுவார்.
3. தகுதிகாண் பருவ காலத்தில் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். இத்தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.
4. தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படை பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் இந்தச் செயல்முறைகளை உடனடியாக மேற்படி உரிய நபருக்கு அளிக்க வேண்டும். இப்பணிவரன்முறை ஆணை தனியரது 10ம் வகுப்பு மதிப்பெண் சான்று உண்மைத்தன்மை வாய்ந்தது என சான்று பெற்றதன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்தான பதிவுகள் சம்மந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இணைப்பு : - அசல் பணிப்பதிவேடு.

முதன்மைக் கல்வி அலுவலர்,
கோயம்புத்தூர் – 641001.

19.11.2021.

பெறுநர்
செல்வி.சு. ராஜேஸ்வரி,
இளநிலை உதவியாளர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, சேரிபாளையம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.
(பள்ளித் தலைமையாசிரியர் வழி)

**நகல்** : தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, சேரிபாளையம், கோவை மாவட்டம்.